திராவிடர் நல இயக்குநர் அலுவலகம்
11 OCT 2022
சென்னை-5

## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – வன்கொடுமை தடுப்பு விதிகள் 1995 - கருணை அடிப்படையில் பணி நியமனம் - செல்வி கோ.புஷ்பராணி என்பவரது இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந-7)துறை

அரசாணை (ப) எண். 205

நாள்: 07.10.2022
சுபகிருது வருடம்,
புரட்டாசி மாதம் 20 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2053,

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020.
2. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் எண்.ஏ2/5075/2018..
3. ஆதிதிராவிடர் நல ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.இ6/ 14784/2022, நாள்.18.07.2022.

**ஆணை:-**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட, ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதத்தில், திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், வன்னிகோனேந்தல் கிராமம், தெற்கு தெருவைச் சேர்ந்த திரு.கோவிந்தன் என்பவர் சாதிக் கலவரத்தில் 27.12.2017 அன்று படுகொலை செய்யப்பட்டதால், வன்கொடுமை தடுப்பு விதிகள் 1995 இன்படி, அன்னாரது மகள் செல்வி கோ.புஷ்பராணி என்பவருக்கு, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் வழங்கப்பட்டு, திருநெல்வேலி மாவட்டம், துலுக்கர்பட்டி அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் 09.10.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும், அன்னாரது இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்து, உரிய ஆணைப் பிறப்பிக்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. அதனடிப்படையில், வன்கொடுமைத் தடுப்பு விதிகள் 1995-இன்படி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, திருநெல்வேலி மாவட்டம், துலுக்கர்பட்டி அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும், செல்வி கோ.புஷ்பராணி என்பவர் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது இளநிலை உதவியாளர் பணியினை அவர் பணியேற்ற நாளான 09.10.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு வரன்முறை செய்யப்படுவதால் செல்வி கோ.புஷ்பராணி, இளநிலை உதவியாளர் என்பவர் ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் இசைவினை முறையே அதன் அ.சா. எண்.15667/ட்டி1/2022, நாள்.15.09.2022 மற்றும் அ.சா.எண்.3175368/ ஜி2/ 2022, நாள்.03.10.2022-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தென்காசி சு ஜவஹர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-5.
செல்வி கோ.புஷ்பராணி, இளநிலை உதவியாளர்,
துலுக்கர்பட்டி, அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளி,
திருநெல்வேலி மாவட்டம், (ஆதிதிராவிடர் நல இயக்குநர் வழியாக)
மாவட்ட கருவூல அலுவலர், திருநெல்வேலி மாவட்டம்,
மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர், சென்னை - 18 / 35.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை-8
நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

மே.கு.எண். இ6/14784/2022, நாள். 14.10.2022
தனியரிடம் சார்வு செய்யும் பொருட்டு.

PERSONAL ASSISTANT TO
The Director of Adi Dravidar
Welfare Department,
Chennai-5.

பெறுநர்.
செல்வி கோ. புஷ்பராணி,
இளநிலை உதவியாளர்,
அரசு ஆதிதிராவிடர் உயர்நிலைப்பள்ளி,
துலுக்கர்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.

ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களின் நேர்முக உதவியாளரின்

செயல்முறைகள், சென்னை–5.

முன்னிலை: திரு சு.பார்த்திபன், B.Sc.,

ந.க.எண். இ6/14784/2022

நாள்.14.10.2022.

பொருள்: பணியாளர் தொகுதி – வன்கொடுமை தடுப்பு விதிகள் 1995, விதி 12(4) இன் படி பணி நியமனம் செய்யப்பட்டு – திருநெல்வேலி மாவட்டம் – துலுக்கர்பட்டி – அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி – இளநிலை உதவியாளர் – செல்வி கோ.புஷ்பராணி என்பவரது பணியினை 09.10.2020 மு.ப முதல் வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை: அரசாணை (ப) எண்.205, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந7) துறை, நாள். 07.10.2022.

&&&&&

ஆணை:

பார்வையில் காணும் அரசாணையில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) விதிகள் 1995, விதி 12(4) இன்படி கருணைஅடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, திருநெல்வேலி மாவட்டம், துலுக்கர்பட்டி, அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் செல்வி கோ.புஷ்பராணி என்பவர் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 09.10.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால் செல்வி கோ.புஷ்பராணி, இளநிலை உதவியாளர் என்பவர் முதல் ஆண்டு ஊதிய உயர்வு மட்டுமே பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

ஆதிதிராவிடர் நல இயக்குநரின்
நேர்முக உதவியாளர்.

3/5

பெறுநர்.

செல்வி கோ.புஷ்பராணி,
இளநிலை உதவியாளர்,
அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி,
துலுக்கர்பட்டி,
திருநெல்வேலி மாவட்டம்.

(தலைமையாசிரியர் மூலம்
தனியருக்கு சார்வு செய்யும்
பொருட்டு).